இரண்டாம் தவணைப் பரீட்சை – 2017

தமிழ் இலக்கிய நயம்        தரம் - 10

விடைகள்

01. 1.அ. குற்றமற்ற சேவையினைச் செய்து சமுதாயம் எங்கும் சிறந்த முன்னேற்றம் கண்டதென அறியச்செய்வீர்.

ஆ, அறியச்செய்தல்

2. அ. மனிதன் ஒரு சில விடயங்களுக்காக தன்னை அர்ப்பணிக்கின்றான் ஆனால் மரங்களோ மனிதர்களுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணிக்கின்றன.

ஆ, புறாவிற்கு தன் உடலை அர்ப்பணித்ததன் காரணமாக.

3. அ. உருவக அணி
ஆ. அன்பு கயிறாக உருவகிக்கப்பட்டுள்ளது.

4. அ. தாய்ப்பசுவால், காளைமாட்டிற்கு

ஆ. காளைமாடு குமரனைத் தாக்கியபோது

5. அ. இலக்குமணன்
ஆ. சிங்கம்

02. 1. குழந்தை பிறந்ததும் குழந்தையை வாழ்த்த மருத்துவிச்சியினால் பாடப்படுவது.

2. சுற்றத்தவர், உறவினர் போற்றும்படியாக வாழ்வதோடு கடவுளுக்கும் ஆசானுக்கும் நல்ல பிள்ளையாக வாழவேண்டும். எனவும் மன்னருக்கும் மன்னராய் புவியில் உயர்வடைய வேண்டும் எனவும் வாழ்த்துகின்றாள்.

3. குழந்தை அரசருக்கு உயர்வுபெற்று வாழவேண்டும் என்பது.

4. எதுகையணி – அரிசி அரிசி, மஞ்சள் மஞ்சள்
மோனையணி – அயலும் அன்னமும்

5. கிராமப்புறத்தில் கையாளப்படும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
'ஆச்சியும் அப்பாவும் வாழவேணும், கோச்சிவாழ கொப்பர் வாழ'

பகுதி – II

03. அ. ஆரம்பத்தில் ஆள்வோரும் ஆளப்படுவோரும் என்ற நிலைமை காணப்பட்டது.
ஆ. அரச தொழில்கள்/ அலுவலகத் தொழில்கள்

இ. காரில் போக வசதிபடைத்தவர்கள் காரைத்தூசி துடைக்கவும், சைக்கிளில் செல்பவர்கள் அதைத்துடைத்துப் பழுதுபார்க்கவும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை ஆதாரமாகக் கருதுதல்

ஈ. எல்லோரும் அந்நாட்டு மன்னர் என்ற அடியின் மூலம் ஆள்வோர் ஆளப்படுவோராகவும் ஆளப்படுவோர் ஆள்வோராகவும் மாறும் நிலை ஏற்பட்டு வாய்புக்கிடைத்தல்.

உ. தொழில் வேறுபாடின்றி யாவரையும் சமமாக மதிக்கவேண்டும். சிறு சிறு வேலைகளையும் அவரவர் செய்யப் பழகிக்கொள்ள வேண்டும்.

## பகுதி - III

04. அ. நீரில் தனது கண்கள் தெரிந்தபோது கெண்டை மீன் எனக்கருதி இதன் உருவத்தை தலைவியின் கண்ணுக்கு ஒப்பிடப்படுதல், இதிலிருந்து மங்கையின் கண்களின் அழகு விபரிப்பது நயக்கத்தக்கது.

ஆ. வாள் போன்ற கண்களையுடைய மங்கையின் நெற்றியில் உள்ள பொட்டினது அழகைக் கண்ட மன்மதன் அவளது கையில் உள்ள மலரம்புகள் ஐந்தையும் அவள் முன்வைத்து வணங்குதல்.